# Eastern University, Sri Lanka
# Faculty of Commerce and Management
# (External Degree)
# Part I-(Second Year) Examination in BBA 2008/2009
# (Proper/ Repeat) May/June 2013
# EXB 201 Macro Economics

23 AUG 2013
EASTERN UNIVERSITY, S.

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. நேரம்:- 03 மணித்தியாலங்கள்

---

1. (a). பேரினப் பொருளியலை வரையறுத்துக் கூறுக.
அது பற்றிய அறிவு எமக்கு ஏன் தேவைப்படுகிறது ? (08 புள்ளிகள்)

(b). பழம் பொருளியலாளர்களின் பேரினப்பொருளியல் மாதிரியைச் சுருக்கமாக விளக்கி விமர்சிக்க.

(12 புள்ளிகள்)

(மொத்தம்20 புள்ளிகள்)

2. (a) தேசிய வருமானக் கணிப்பீடு தொடர்பாக பின்வரும் எண்ணக்கருக்களை விளக்குக

(i) மொத்த உள்நாட்டு உற்பத்தி இடைவெளி(GDP Gap)

(ii) கூட்டப்பட்ட பெறுமதி (Value Added)

(10 புள்ளிகள்)

(b). ஒரு மூடப்பட்ட பொருளாதாரத்தின் நுகர்வுத் தொழிற்பாடு கீழே தரப்படுகிறது.

$$C = 40 + 0.8Y$$

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(I) தன்னிச்சையான முதலீடாக 40 மில்லியன் இடம்பெற்றால் தேசிய வருமானத்தின் சமநிலை மட்டத்தைக் காண்க.

(II) அரசாங்கம் 30 மில்லியன் ரூபாவை பொருளாதாரத்தில் செலவிடுகிறது எனின் புதிய சமனிலை மட்டம் யாது?

(III) அரசாங்கம் தேசிய வருமான மட்டத்தை 700 மில்லியனாக மாற்ற விரும்புகிறது. இதற்காக அரசாங்கம் தனது செலவீட்டில் செய்யவேண்டிய மாற்றம் என்ன?

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

3. (a) நுகர்வுத் தொழிற்பாடு தொடர்பான முழுவருமானக் கருதுகோளினை சுருக்கமாக விளக்கி அது எவ்வகையில் கெயின்சின் நுகர்வு நடத்தைக் கோட்பாட்டை ஒத்ததாகக் காணப்படுகிறது என்பதைக் குறிப்பிடுக

(12 புள்ளிகள்)

(b) பணத்திற்கான கொடுக்கல் வாங்கல் நோக்கக் கேள்வியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விளக்குக.

(08 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

4. (a) பொருளியலில் முதலீடு என்ற பதம் எதனைக் குறித்து நிற்கின்றது? உதாரணம் தந்து விளக்குக.

(04 புள்ளிகள்)

(b) முதலீடானது எவ்வழிகளில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக விளங்குகிறது? விளக்குக

(08 புள்ளிகள்)

(C) வர்த்தக சகடவோட்டத்தின் வெவ்வேறு நிலைகளை வரைபட உதவியுடன் விளக்குக

(08 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றைச் சுருக்கமாக விளக்குக.

(a) செலவுத்தூண்டற் பணவீக்கம்.

(b) சென்மதிநிலுவையின் நடைமுறைக்கணக்கு

(c) வணிகவங்கிகளின் தொழிற்பாடுகள்

(d) பணநிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

# # # # # # # # # # # # # # # # # # # # # # # # #